"ஓம் நமசிவாய"

# பிரகாசதீபம்



மூளாய் தெற்கினைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும்
கொண்டு வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்த

அமரர்

உயர் திரு. **பழனி சிவப்பிரகாசம்** அவர்களின்



நீங்காத நினைவுகளைச் சுமந்து வரும்

## நினைவுமலர்

26.07.2016


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பிரகாச தீபம்



மூளாய் தெற்கினைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும்
கொண்டு வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்த

அமரர்

## உயர்திரு பழனி சிவப்பிரகாசம் அவர்களின்

நீங்காத நினைவுகளைச் சுமந்துவரும்

# நினைவு மலர்

**26.07.2016**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

மானிடராய்ப் பிறந்து வளர்ந்து வாழ்ந்து
நிறைவுகள் பலகண்ட பின்னரே இறையடியில் புகுந்துவிட்ட

# அமரர்
# உயர்திரு பழனி சிவப்பிரகாசம் அவர்களின்

திருப்பாத கமலங்களிற்கே இம்மலர்

## சமர்ப்பணமாகுக!

பெற்று வளர்த்து பேணியெமைக் காத்திருந்து
நற்கல்வி நாம்பெறவே நல்லதுணையாயிருந்து
உற்றதெலாம் எமக்களித்து உயர்வுகளும் பலவளித்து
பற்றுடனே வாழ்ந்த எங்கள் பெருங்குடும்பத் தலைவனார்
அற்புதனார் பழனி சிவப்பிரகாசப் பெருந்தகையோன்
பொற்பதம் நாடியே இறையடியுட் புகுந்ததனால்
வற்றாத அவர்வாழ்வின் நினைவெடுத்தோர் மலராக்கி
கற்றுணர்ந்தார் பாதமதில் சாற்றுகின்றோம் சமர்ப்பணமே!

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்ததனால்
வானுறையும் தெய்வத்தில் வைக்கப்பட்டிருக்கும்

அமரர்

## உயர் திரு. பழனி சிவப்பிரகாசம் அவர்கள்

மிகவுமே உயர்ந்த தோற்றம் மிடுக்கான தகுந்தநடை
தகவுடைத் தன்மைபலவும் தாங்கியே இருக்கும் நெஞ்சம்
திகளொளி தன்னில் தோய்ந்த திருவுடை வதனம்தானும்
அகமிக அழகும் கொண்டார் சிவப்பிரகாசம் ஐவரே – காண்!

மண்ணுக்காய்
**23.09.1931**

விண்ணுக்காய்
**26.06.2016**



அமரர்
உயர்திரு பழனி சிவப்பிரகாசம் அவர்களின்
அருவமான ஆத்மாவை ஆண்டாண்டுதோறும்
போற்றிப் பூசிப்பதற்கான

# திதிவெண்பா

மானிட வாழ்வெடுத்து மகத்தான பணிகள் செய்து
தேனிலும் இனிய வாழ்வு வாழ்ந்தவர் சிவப்பிரகாசம்
ஊனினை உருக்கி இறைவன் தாழினை அடைந்த திதி – தமிழ்
ஆனியின் அபரபட்ச சப்தமியாம் என்றே துதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வெட்டு

அன்புடையீர்!

நாங்கள் எங்களுடைய தந்தையார் குடும்பத்தலைவர் **அமரர் பழனி சிவப்பிரகாசம்** அவர்களை மதித்து வாழ்ந்தது போல நீங்களும் அவர் சுகவீனமுற்றிருந்த நாட்களிலே அவரை மதித்து நலம் விசாரித்து ஆறுதல் அளித்ததோடு மட்டும் நின்றுவிடாமல் அவர் அமரத்துவம் அடைந்த போது எங்களோடு எங்களாகவே நின்றுகொண்டு ஆறுதல் அளித்தீர்கள். இப்போது அவருடைய நினைவுகள் மாத்திரமே எங்களோடு நிற்கின்றன. அதேபோலவே அவருடைய நினைவுகள் உங்களோடும் அழியாமல் இருக்க வேண்டும் என்பதற்காக அவருடைய சில நினைவுகளைக் கோர்த்தெடுத்தோர் மலராக்கி அழியாமல் இருப்பது என்று அர்த்தப்படும்படியாக கல்வெட்டு என்று பெயர் சூட்டி இதனைத் தங்களின் திருக்கரங்களில் ஒப்படைத்து ஆறுதல் அடைகின்றோம்.

நன்றி

*குடும்பத்தவர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

**உயர்திரு புழனி சிவப்பிரகாசம் அவர்களின்**
**அருமையும் பெருமையும் மிக்க ஆத்மாவின் சாந்திக்காக**
**எங்களுக்கு இந்த உடலையும் ஆத்மாவையும் தந்த**
**இறைவனை பஞ்சபுராணம் ஓதி வழிபடுவோமாக!**

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை
இந்தினிளம்பிறை போலுமெயிற்றனை
நந்திமகன்தனை ஞானக் கொழுந்தனைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே!

## தேவாரம்

சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலுமுன்னை மறந்தறியேன்
உன்னாமம் யென்நாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறுசூலை தவிர்த்தருள்வாய்
அலங்தே னடியே ளதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே!

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றயே நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன யோகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக்கூத்தா
அம்பொன்செய் அம்பலத்தரசே
ஏறணி கொடியெம் மீசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீருந்திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும்பெறாத அறிவுபெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும்உலகும் கழறஉழறி
உமைமண வாளனுக்காய்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே!

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினியாதா
வெற்றி வேலாயுதப் பெருமானே!

## வாழ்த்து

வான் முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தால் காவியமாகிவிட்ட

# அமரர்
# உயர்திரு புழனி சிவப்பிரகாசம் அவர்களின் வாழ்வியல் நோக்கு

யாழ்ப்பாணத்தின் வலிமேற்குப் பகுதியிலே முத்தான தமிழ் மணக்கும் மூளாய்க்கிராமத்திலே கமபுலமும் கால்நடையும் கல்விமான் களுமென நிரம்பிவளிந்த தென்மூளாய்ப் பகுதியிலே அக்காலத்திலே மிகமிகச் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்தவர்கள் கதிரவேலு குடும்பத்தவர் களான பழனி செல்லாச்சி தம்பதியர்களாவர். பழனி செல்லாச்சி தம்பதி யர்கள் அன்போடும் பண்போடும் இல்லறத்தை நடாத்திவருகின்ற காலத்திலே அவர்களுக்கு எல்லா வகையான செல்வங்களும் நிரம்பி வளிந்ததோடு செல்வத்துட் செல்வமான பிள்ளைச் செல்வங்களாக ஒரு ஆணும் இரு பெண்களுமென மூவர் பிறந்தார்கள்.

அவர்கள் முறையே சிவப்பிரகாசம் என்றும் இராசேஸ்வரி என்றும் பரமேஸ்வரி என்றும் பெயர் கொண்டு விளங்கினார்கள். பழனி செல்லாச்சி தம்பதியர்களின் அரும்பெரும் பிள்ளைகளான இந்த மூவ ரிலே நாங்கள் இங்கே வாழ்வியலை நோக்குகின்ற மூத்தவரும் ஒரே ஒரு ஆண்மகனுமான அமரர் சிவப்பிரகாசம் அவர்கள் பழனி செல்லாச்சி தம்பதியர்களுக்கு அருமையும் பெருமையும் மிக்க மகனாக 23.09.1931 இல் பிறந்தார்.

அமரர் சிவப்பிரகாசம் அவர்கள் மூத்தமகனாகப் பிறந்து தமக்கு பெற்றோர் என்ற அந்தஸ்த்தை கொடுத்தமையால் பெற்றோர்கள் அவர் மீது அளவுகடந்த அன்பும் பாசமும் பற்றும் உடையவர்களாக அவரை வளர்த்து வந்தார்கள். அமரர் சிவப்பிரகாசம் அவர்கள் பிள்ளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவத்திலேயே கடவுள் பக்தியும் நல்ல அறிவு ஆற்றலும் உடையவராகக் காணப்பட்டமையினால் பெற்றோர்கள் அவருக்குச் சிறந்த கல்வியைப் போதிக்க வேண்டுமென விரும்பி அக்காலத்திலே கிராமத்திலே சிறந்து விளங்கிய கல்விக்கூடமான மூளாய் அமெரிக்கன் மிசன் பாடசாலை யிலே சேர்த்து சிறந்த அடிப்படைக் கல்வியை பெற்றுக்கொடுத்தார்கள். அதிபர்களும் ஆசிரியர்களும் மாணவர்களும் மெச்சுகின்ற வகையிலே அடிப்படைக் கல்வியை ஆழமாகப் கற்றுக்கொண்ட அமரர் சிவப்பிரகாசம் அவர்கள் இடைநிலைக்கல்வியை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி யிலேயும் பெற்றுக்கொண்டு பெற்றோருக்கு கமபுல வேலைகளுக்கு உதவுவதிலேயும் சகோதரிமார் மீது அன்பு செலுத்தி அவர்களுக்காக உழைப்பதிலேயும் கவனம் செலுத்திவந்தார். அமரர் சிவப்பிரகாசம் அவர்கள் சிறந்தொரு கல்விமானாக வருவார் அவரைத் தொடர்ந்து கல்வி கற்க வையுங்கள் என்று எத்தனையோ கல்விமான்ககளும் பெரியார் களும் கூறியபோதும் குடும்பச் சூழ்நிலையும் அக்காலத்திற்கேற்ப கற்ற கல்வி போதும் என்ற எண்ணமும் அவரை தொடர்ந்தும் கல்வி கற்கின்ற நிலையிலிருந்து இடைநிறுத்தி குடும்பத்திற்காக எங்காவது ஒருதொழில் தேடவேண்டு என்ற ஆர்வத்தை ஏற்படுத்தியது.

தொழில் தேடும் படலத்தை ஆரம்பித்த அமரர் சிவப்பிரகாசம் அவர்களுக்கு அக்காலத்திலே மிகவும் கௌரவமான தொழிலாகக் கருதப்பட்ட சுழிபுரம் தபாற்கந்தோரிலே தபாலக ஊழியராக நியமனம் கிடைத்தது. கிடைத்த உத்தியோகத்தை சிறந்த முறையிலே கண்ணும் கருத்துமாக பார்த்துவந்த அமரர் சிவப்பிரகாசம் அவர்கள் தான் பார்க் கின்ற உத்தியோகத்தின் ஊதியத்தைக் கொண்டு பெற்றோர்களையும் தான் அன்போடும் பாசத்தோடும் நேசித்த சகோதரிமார்களையும் சிறந்த முறையிலே காப்பாற்றி வந்தார். காலங்கள் நகர்ந்துசெல்ல அமரர் சிவப்பிரகாசம் அவர்கள் திருமணப் பருவத்தை அடைந்துவிட்டதை உணர்ந்து கொண்ட பெற்றோரும் உற்றார் உறவினர்களும் அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பத்திற்கிணங்கவும் அவருக்கு எல்லா வகையிலேயும் பொருத்த மானவருமாகக் காணப்பட்ட பொன்னாலையைச் சேர்ந்த சின்னத்தம்பி பொன்னாச்சி தம்பதியர்களின் அன்புமகளான சின்னாட்சிப்பிள்ளை (ஜானகி) அவர்களை நிச்சயம் செய்து 31.05.1962ல் நல்லதோர் சுப நாளில் சிவப்பிரகாசம் சின்னாட்சிப்பிள்ளை (ஜானகி) அவர்களின் திருமணத்தை மிக விமர்சையாக நிறைவேற்றி வைத்தார்கள். கணவர் தபாலக ஊழியராகவும் மனைவி மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை யிலே ஓர் தாதியாகவும் இருந்துகொண்டு இருவரும் அன்போடும் பண் போடும் பாசத்தோடும் இல்லறத்தை இனிதே நடாத்தி வந்தார்கள்.

சிவப்பிரகாசம் சின்னாட்சிப்பிள்ளை (ஜானகி) தம்பதியர்கள் இன்முகத்தவர்களாகவும் விருந்தோம்பும் பண்புடையவர்களாகவும் அறம் செய்பவர்களாகவும் இல்லறத்தை இனிதே ஒச்சுகின்ற காலத்திலே அவர்களுக்கு அவர்களின் இல்லறத்து வாரிசுகளாக எண்மர் பிள்ளை களாகப் பிறந்தார்கள். அவர்கள் முறையே ஜெயந்திரகுமார் என்றும் ஜெயராணி என்றும் பாலகுமார் என்றும் பத்மராணி என்றும் இன்பராணி என்றும் நந்குமார் என்றும் விக்னகுமார் என்றும் செல்வராணி என்றும் பெயர்கொண்டு விளங்கினார்கள். பிள்ளைகளின் நல்வாழ்விற்காக திருமதி சிவப்பிரகாசம் அவர்கள் தான் பார்த்த தாதி வேலையினின்றும் நீங்கிவிடவே பெரிய குடும்பம் சிறிய வருமானம் என்ற நிலைக்குக் குடும்பம் வரவே தையற்கலையிலே வல்லவரான திருமதி சிவப்பிரகாசம் அவர்கள் தையற்கலையினால் தனது கணவரான சிவப்பிரகாசம் அவர் களுக்குக் கைகொடுத்து உதவி இருவருமாக பிள்ளைகளை வளர்த்தெடுப் பதிலேயும் அவர்களுக்கு நல்ல கல்வியினை பெற்றுக்கொடுப்பதிலேயும் கவனம் செலுத்தியதோடு உதாரணத்திற்குக் கூறக் கூடிய வகையிலே நல்லதொரு குடும்பமாக வாழ்ந்து வந்தார்கள். காலங்கள் உருண் டோடவே பிள்ளைகளுக்கு தொழில் வாய்ப்பினையும் இல்லறத்தினை யும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென விரும்பிய அமரர் சிவப்பிரகாசம் அவர்கள் அந்த முயற்சியலே ஈடுபட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையிலே தனது மூத்தமகன் ஜெயந்திரகுமார் அவர்களைக் கல்விகேள்விகளிலே வல்லவராக்கி அவரைத் தான் கடமையாற்றிய சுழிபுரம் தபாற்கந்தோரிலேயே தபாலக ஊழியராக ஆக்கிக் கொண்டதோடு மாத்திரமல்லாமல் தான் செய்த சமயப்பணி, சமூகப்பணி, ஆலயப்பணி என்பவற்றையெல்லாம் அவருக்குக் கற்றுக்கொடுத்ததோடு அவரது மகனான பிரணவன் அவர்களை மூத்த பேரப்பிள்ளையாகக் கண்டு கொண்டு மகிழ்ந்ததோடு மட்டுமன்றி மகனுக்கு மனோகரி அவர்களைத் திருமணம் செய்துவைத்து அவரோடு அவர் மகிழ்ச்சியோடும் சந்தோசத்தோடும் வாழ்வது கண்டு திருப்தியும் கொண்டிருந்தார். அதே போலவே அமரர் சிவப்பிரகாசம் அவர்கள் தனது இரண்டாவது பிள்ளையும் மகளுமான ஜெயராணி அவர்களுக்கு சேனாதிராஜா அவர்களை மணம் முடித்து வைத்து அவர்கள் இன்புற்று வாழ்வது கண்டு மகிழ்ச்சி கொண்டதோடு அவர்களுக்கும் அவர்களின் இல்லறப் பயனால் கிடைத்த பிள்ளைகளான காயத்திரி, கார்த்திகா, காஞ்சனா ஆகியோரையும் பேரக் குழந்தைகளாகக் கண்டு மகிழ்ச்சி கொண்டார். மேலும் தனது மூன்றாவது பிள்ளையும் மகனுமான பாலகுமார் அவர்களுக்கு தவமலர் அவர்களைத் திருமணம் செய்துவைத்து அவர்கள் மகிழ்வோடு வாழ்வது கண்டு மகிழச்சி கொண்டதோடு அவர்களுக்கும் அவர்களின் இல்லறத்தால் விளைந்த முத்துக்களான பாமினி, தர்மினி, நர்த்தனன் ஆகியோரையும் பேரப்பிள்ளைகள் வரிசையிலே சேர்த்துக்கொண்டு மகிழ்ச்சியுற்றார்.

அதே போலவே அமரர் சிவப்பிரகாசம் அவர்கள் தனது நான்காவது பிள்ளையும் மகளுமான பத்மராணி அவர்களுக்கு வரதன் அவர்களைத் திருமணம் செய்து வைத்து அவரையும் தன் மருமகனாக்கிக் கொண்டதோடு அவர் தம் அன்பு வாழ்க்கை கண்டு மகிழ்ச்சி கொண்டதோடு மட்டுமல்லாமல் அவர்களின் அன்புப் பிள்ளைகளான சரவணன், நீதன் ஆகியோரையும் பேரப்பிள்ளைகளாகப் பெற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமை கொண்டார். மேலும் தனது ஐந்தாவது பிள்ளையும் மகளு மான இன்பராணி அவர்களுக்கு பிறேமச்சந்திரன் அவர்களைத் திருமணம் செய்துவைத்து அவர்கள் லண்டன்மாநகரிலே சீரோடும் சிறப்போடும் வாழ்வது கண்டு மகிழ்ச்சி அடைந்ததோடு மட்டுமல்லாமல் அவர்கள் ஈன்றெடுத்த பிள்ளைகளான திருச்சிகா, திருச்சிகன் ஆகி யோரையும் பேரப்பிள்ளைகளாக்கிப் பெருமை கொண்டார். அடுத்து தனது ஆறாவது பிள்ளையும் மகனுமான நந்தகுமார் அவர்கள் தியாக வேள்வியிலே சங்கமமாகி அமரத்துவம் எய்தியமை கண்டு மிகுந்த வேதனையோடு வாழ்ந்து வந்தார்.

அதேபோலவே தனது ஏழாவது பிள்ளையும் மகனுமான விக்னகுமார் அவர்கள் ஓர் நீதிமன்ற ஊழியராகக் கடமையாற்றுவது கண்டு பெருமை கொண்டதோடு அவருக்கும் பேபிவதனா அவர்களைத் திருமணம் செய்துவைத்து அவரையும் தன் அன்பிற்கினிய மருமகளாக் கிக் கொண்டதோடு அவர்களுடைய அன்புச் செல்வங்களான விஸ்னுப் பிரியா, சிவப்பிரியன் ஆகியோரையும் பேரக்குழந்தைகளாகக் கண்டு களிப்புற்றிருந்தார். அடுத்து அமரர் சிவப்பிரகாசம் அவர்கள் தனது எட்டாவது பிள்ளையும் மகளுமான செல்வராணி அவர்களுக்கு பாசமும் நேசமும் மிக்க சசிகரன் அவர்களைத் திருமணம் செய்துவைத்து மகள் மல்லாகம் குளமங்கால் றோ. க. வித்தியாலயத்திலே ஓர் பாடசாலைப் பணியாளராகக் கடமையாற்றுவது கண்டும் அவர்கள் இன்புற்று வாழ்வது கண்டும் மகிழ்ச்சிக் கடலில் மிதந்தார்.

இவ்வாறு இல்லத்துப் பணிகளினை இனிதுறவே நிறைவேற்றிய அமரர் சிவப்பிரகாசம் வழமைபோல் ஆலயத்துப் பணிகளினையும் சமயப்பணிகளையும் சமூகப்பணிகளையும் தன்னுடைய ஆண் மக்களையும் இணைத்துக் கொண்டு தொடர்ந்தும் நிறைவேற்றி வந்தார். ஆகம விதிமுறைகளை சிறப்புறவே அறிந்து வைத்திருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் சிவப்பிரகாசம் அவர்கள் ஆகம விதிகளுக்கு மாறாக எங்காவது ஏதாவது நடந்தால் அங்கே அதனை உடனேயே சுட்டிக் காட்டுகின்ற வராகக் காணப்பட்டார். கிராமத்து வீடுகளில் மாத்திரம் அல்லாது வேறு கிராமங்களில் வாழும் உறவினர்களுடைய வீடுகளில் கூட ஏதாவது நிகழ்வுகள் நடந்தால் அந்த நிகழ்வுகளின் முறைகளைத் தெரிந்து வைத்துக் கொண்டு சிறப்புறவே அவற்றைக் கொண்டு நடத்துவார். அந்தணமோ மந்திரமே இல்லாமல் செய்கின்ற கிரிகைகளுக்கு அவ ருக்கு நிகர் அவரேதான் என்று கூறலாம். மூளாய் வதிரன் புலோ தேவஸ்தானங்களோடு மிக நெருக்கமான பக்திகொண்டிருந்த அமரர் அவர்கள் அந்த ஆலயங்களின் வளர்ச்சிக்காகவும் வளங்களிற்காகவும் அரும்பணி ஆற்றியுள்ளார். குறிப்பாக மேற்படி ஆலயங்களிற்கு சித்திரத் தேர் ஒன்று உருவாவதற்கும் அது சிறந்த முறையிலே ஓடுவதற்கும் அமரர் சிவப்பிரகாசம் அவர்கள் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கதாகும். அதுமட்டுமல்லாமல் எல்லா வயதினரும் மிகவும் விரும்புகின்ற சூரன் போர் உற்சவத்தினை பொறுப்பேற்று அதனை சிறந்த முறையிலே நடாத்தியவரும் அவரேயாவார். ஒரு தீர்க்கதரிசியாகவும் ஒருவிடயத்தை அதன்முடிவை முன்னரே தீர்மானித்துக் கூறகூடியவராகவும் விளங்கிய அமரர் சிவப்பிரகாசம் அவர்கள் அனுபவம் மிக்க எண்பத்தைந்து ஆண்டுகளை இப்போது கடந்து கொண்டிருந்தார்.

வயதின் மூப்பினாலும் நீண்டகால நோய்களின் தாக்கத்தாலும் பாதிக்கப்பட்ட அமரர் சிவப்பிரகாசம் அவர்கள் சற்று நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலைகளிலே அனுமதிக்கப்பட்டு வைத்தியங்கள் செய்தார். பிள்ளைகளும் மருமக்களும் பேரப்பிள்ளைகளும் மனைவியும் என்று எல்லோரும் அவருடைய நலனிலே அக்கறைகொண்டு வேண்டிய உதவிகள் அனைத்தையும் அன்போடும் பாசத்தோடும் அக்கறையோடும் செய்து வந்தார்கள். ஆனாலும் அமரர் சிவப்பிரகாசம் அவர்களுடைய நோய் அதிகரித்துக் கொண்டே வந்தது. மிகவும் தளர்ந்து போய்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்ட அவரை அன்பும் பாசமும் அபிமானமும் மிக்க அனை வருமே சென்று பார்வையிட்டு ஆறுதல் கூறினார்கள். ஆனாலும் எங்களுடைய கையிலே எதுவும் இல்லையல்லவா. அன்று மிகவும் உற்சாகமாகக் காணப்பட்ட அமரர் அவர்கள் மிகப் புனிதமாகவும் சந்தோசமாகவும் காணப்பட்டார். எல்லோரும் அமரர் சிவப்பிரகாசம் அவர்கள் தேறிவிட்டார், எழுந்துவிட்டார், நடக்கின்றார் என்றெல்லாம் மகிழ்ச்சிக்கடலில் மிதந்தவேளை அன்று 26.06.2016 அதிகாலை வேளை சகிக்வே முடியாத அந்த நிகழ்வு நடந்தது.

சுமார் எண்பத்திஐந்து ஆண்டுகளுக்கு மேலாக தனக்காவும். பின் பெற்றோர்களிற்காகவும். சகோதரங்களிற்காவும் மனைவிக்காகவும் பிள்ளைகளுக்காகவும் மருமக்களிற்காகவும் உற்றார் உறவினர்களுக் காகவும் ஊர்மக்களிற்காகவும் ஓயாது பம்பமரம் போலவே சுழன்று கொண்டிருந்த அமரர் சிவப்பிரகாசம் அவர்கள் எல்லோரையும் ஒரு கணம் உறைய வைத்துவிட்டு பழனி சிவப்பிரகாசம் என்கின்ற ஒரு உத்தம புத்திரனின் வரலாறு என்கின்ற புத்தகத்தை இறுகவே மூடிக் கொண்டார்!

**வாழ்க அவரின் வரலாறு! வளர்க அவரின் புகழ்!**

**ஓம்**

**சாந்தி! சாந்தி! சாந்தி!**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தம பத்தினியார் உள்ளங் குமுறுகின்றார்!

காதலித்தீர் கைப்பிடித்தீர் கலங்காமல் காத்துவந்தீர்
சோதனைகள் வேதனைகள் பலகடந்தே வெற்றிகொண்டீர்
நாதனென நான்சுமந்த நல்ல பிரகாசம் ஐயாவே
ஆதவன்போல் மறைந்தீரோ அடுத்துஎன்று வருவீரோ!

கண்மணிகள் எண்மரினைக் கைகளிலே சுமக்கவைத்தீர்
பண்புடனே அன்புடனே பக்கத்துணை பலவளித்தீர்
தண்ணொளியாய் எனக்கெறித நல்லபிரகாசம் ஐயாவே
எண்ணரியீர் மறைந்தீரோ என்றுஇனி வருவீரோ!

சிறுதொழில்தான் புரிந்தாலும் பெருவாழ்வு வாழ வைத்தீர்
உறுதியோடு நின்றெமக்கு உயர்வுதர உழைத்துவந்தீர்
பெறுமதியாய் நான்அணிந்த நல்லபிரகாசம் ஐயாவே
அறுதியாய்த்தான் போனீரோ அழைத்திட்டால் வருவீரோ!

குடும்பத்தார் அனைவரிலும் குறையாத பற்றுவைத்தீர்
கடும்பக்தி யோடிறைவன் பணியெல்லாம் ஆற்றிகின்றீர்
நெடுங்காலம் எனைக்காத்த நல்லபிரகாசம் ஐயாவே
படுந்துயரம் பார்த்தீரோ பதைத்தழுதால் வருவீரோ!

பொட்டதுவும் கரைந்ததுவோ பூவாடி வீழ்ந்ததுவோ
கட்டிவைத்த மாங்கல்யம் கைநழுவிப் போனதுவோ
கொட்டுமன்பில் எனைத்தோய்த்த நல்லபிரகாசம் ஐயாவே
கட்டையின் மேல் படுத்தீரோ எனைவிட்டுத்தான் போனீரோ!

பாசமுள்ள
மனைவியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தந்தையாரின் சிறப்பை தரணிக்கு உணர்த்தும் பிள்ளைகள்

பெற்றோரே தெய்வமென்ற பெரும்பொருளை கற்றிடநாம்
உற்றதுணை எமக்கிருந்து உணர்த்திவிட்ட அப்பாவே
அற்புதத் தந்தையான சிவப்பிரகாசப் பேர்சுமந்தே
பொற்பதத்தை ஏன்மறைத்தீர் புலம்பிநாம் அழுதிடவோ!

கைப்பிடித்து எமையந்தக் கல்லூரி மடியேற்றி
ஒப்பரிய கற்றிடநாம் ஊக்குவித்த அப்பாவே
செப்பரிய தந்தையாகிச் சிவப்பிரகாசப் பேர்சுமந்தே
இப்புவியை ஏன்துறந்தீர் புலம்பிநாம் அழுதிடவோ!

பசியேநாம் அறிந்திடாமல் பரிந்தெமக்கு உப்பிட்டு
நிசிவேளை எல்லாமே விளித்திருந்த அப்பாவே
கசிவான உளம்படைத்த சிவப்பிரகாசப் பேர்சுமந்தே
வசிப்பிடத்தை ஏனிழந்தீர் புலம்பிநாம் அழுதிடவோ!

கோயில்குளம் எல்லாமே கூட்டியெமைச் சென்றங்கு
ஆயிரம் பணிகளினைச் செய்வித்த அப்பாவே
சேயினாற்காய் வாழ்ந்துநல்ல சிவப்பிரகாசப் பேர்சுமந்தே
வாயிற்படி ஏன்கடந்தீர் புலம்பிநாம் அழுதிடவோ!

கலங்கிநாம் நின்றிட்டால் அருகினிலே எமையழைத்து
துலங்குபுலன் திறந்துவிட்ட தூய்மையான அப்பாவே
இலங்குமெழில் கொண்டஉயர் சிவப்பிரகாசப் பேர்சுமந்தே
வலம்வரலை ஏன்நிறுத்தினீர்கள் புலம்பிநாம் அழுதிடவோ!

பாசமுள்ள
பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளத்தை உருகவைக்கும் மருமக்கள்

மாமா என்றதொரு மந்திரத்துள் நின்றீர்கள்
நாமாற்கும் குறைவல்ல என்றுஎமை மதித்தீர்கள்
சீமானே நாம்விரும்பும் கோமானே மாமாவே
பூமாதேவியுமை அழைத்தனளோ சென்றீர்கள்!

பிள்ளைகளைத் தந்தெங்கள் வாழ்வுயர வைத்தீர்கள்
கொள்ளையன்பு கொண்டெங்கள் பிள்ளைகளைச் சுமந்தீர்கள்
வெள்ளைமனம் படைத்தஎங்கள் வித்தகரே மாமாவே
கள்வனவன் காலன்தான் அழைத்தனனோ சென்றீர்கள்!

சித்தத்துள் சிவனொளியை வித்தாக விதைத்தீர்கள்
நித்தமெங்கள் நினைவுக்குள் நிஉலாடி நின்றீர்கள்
உத்தமரே உயர்வெல்லாம் உவந்தளித்த மாமாவே
செத்தவர் புரத்தவன்தான் அழைத்தனனோ சென்றீர்கள்!

தூசியது கண்விளினும் துடிதுடித்தே வருவீர்கள்
ஆசிபல தந்தெமக்கு அருளமுதம் சொல்வீர்கள்
நேசித்த தலைவனாரே நெறிகாட்டும் மாமாவே
பூசித்த வதிரனவன் அழைத்தனனோ சென்றீர்கள்!

நூல்நிலையப் புத்தம்போல் நுணுக்கமெலாம் சொல்வீர்கள்
ஆல்அரசு போல் உயர்ந்தே நிஉல்பரப்பி நின்றீர்கள்
நால்வருக்கும் மேலான நாயனாரே மாமாவே
வேல்சுமந்த தந்தையுமை அழைத்தனரோ சென்றீர்கள்!

*மதிப்பார்ந்த*
*மருமக்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதமுள்ள பேரப்பிள்ளைகளின் பரிதவிப்பு

ஓரத்தில் நின்றுங்கள் திருவுடலை நாம்பார்த்தோம்
ஈரத்து விழிகளுக்குள் நீர்வரநாம் பதைபதைத்தோம்
பாரங்கள் பலதூக்கிக் களைத்தஎங்கள் பேரனாரே
தூரங்கள் அதிகமில்லை சொர்க்கவாழ்வு கிட்டத்தான்!

மெல்லநடை பயின்றுங்கள் மேனிவரநாம் பார்த்தோம்
செல்லமாகப் பேசுகின்ற பாசைகண்டு மகிழ்ச்சிகொண்டோம்
வல்லமைகள் பலதையெங்கள் கரத்தளித்த பேரனாரே
செல்லுமிடம் வேறில்லை சிவனுலகம் கிட்டவேதான்!

தனித்துவமாய் வாழுமுங்கள் வாழ்க்கையையும் நாம்பார்த்தோம்
மனிதரென்றால் இப்படித்தான் வாழவேண்டும் எனநினைத்தோம்
புனிதத்தை பூங்கரத்துள் புதைத்தஎங்கள் பேரனாரே
இனித்தேசம் உமக்கில்லை இறைதேசம் கிட்டவேதான்!

இறுதிவரை உறுதிகாத்த உம்குணத்தை நாம்பார்த்தோம்
வறுமையிலும் செம்மையாக வாழும்வழி கண்ணுற்றோம்
பெறுதற்கு அரியபல பெற்றளித்த பேரனாரே
மறுவாழ்வு உமக்கில்லை பெரும்பேறு கிட்டவேதான்!

வெள்ளைவேட்டி கட்டிநீங்கள் வெளிவரவும் நாம்பார்த்தோம்
அள்ளிஅள்ளிப் பூவெறிந்து அருகுவர நாம்நினைத்தோம்
தெள்ளுதமிழ் காக்கமக ஈந்தஎங்கள் பேரனாரே
கள்வடியும் மலர்களுக்கு உம்காலடியும் கிட்டவேதான்!

பாசமுள்ள
பேரப்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூடிப் பிறந்தவர்களின் உள்ளக் குமுறல்

ஒற்றையாய் வந்தெமக்கு உற்றதுணை நீயளித்தாய்
பற்றுடனே பலகாலம் பக்குவமாய் எமைவளர்த்தாய்
நற்றவத்துச் சோதரனே நாம் விரும்பும் அண்ணாவே
உற்றவரைப் பெற்றவரை விட்டெங்கே மறைந்திட்டாய்!

நல்வாழ்வு எமக்களிக்க நாளெல்லாம் பாடுபட்டாய்
அல்லும் பகலுமெங்கள் அருகிருந்தே அன்புசெய்தாய்
வல்லவனே நல்வனே நாம்விரும்கும் அண்ணாவே
இல்லாளைச் சோதரரை விட்டெங்கே மறைந்திட்டாய்!

சமயத்தும் பணியோடு சமூகப்பணி பலபுரிந்தாய்
கமபுலங்கள் செய்துமெமைக் காத்திடவே நீதுடித்தாய்
நமசிவாய மந்திரனே நாம்விரும்பும் அண்ணாவே
அருமருகர் பேரரையும் விட்டெங்கே மறைந்திட்டாய்!

ஒருதாயின் கருவறையில் இருந்துநாம் பிறந்துவந்தோம்
உருகியவர் தரும்பாலை ஓரிடத்தே குடித்துயர்ந்தோம்
குருவான சோதரனே மூத்தஎங்கள் அண்ணாவே
அருகோரை உறவோரை விட்டெங்கே மறைந்திட்டாய்!

மூத்தோனாய்ப் பிறந்ததனால் காத்தோனாய் நீயிருந்தாய்
ஆத்தோரப் பறவைகளாய் அலையாமல் உணவளித்தாய்
பாத்திரத்தால் உயர்ந்தவனே பாசமுள்ள அண்ணாவே
நீத்தோனாய் ஊருறவை விட்டெங்கே மறைந்திட்டாய்!

உடன் பிறந்த
சகோதரிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சி. ஜெயானந்தசர்மா
பிள்ளையார் கோவில்
மூளாய்
சுழிபுரம்.

S. JEYANANTHASARMA
PILLAIAR KOVIL
MOOLAI
CHULIPURAM.

அமரர் பழனி சிவப்பிரகாசம் அவர்கள் மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ சித்திவிநாயகர், முத்துக்குமாரசுவாமிகள் மீது மிகுந்த பக்தி கொண்டவர். தன்னம்பிக்கையும், துணிச்சலும் கொண்ட இவர் ஆலயத்தில் இடம்பெறும் அனைத்து விழாக்களிலும் முன்னின்று செயற்பட்டும், செயற்படுத்தியும் வருபவர் ஆவார். கந்தஷஷ்டி, சூரன் போர் உபயத்தை பயபக்தியோடு செய்பவர். தாம் எவ்வாறு இறை தொண்டினை ஆற்றியதைப் போன்று தம்பிள்ளைகளையும் இத் தொண்டினை ஆற்றுவதற்கு பழக்கிவிட்டார். அவர்களும் இறை பணியை பக்தி சிரத்தையோடு முன்னெடுத்துச் செல்கின்றனர். அமரர் சிவப்பிரகாசம் அவர்களின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல ஸ்ரீ சித்திவிநாயகர், முத்துக்குமாரசுவாமிகளின் பாதார விந்தங்களைப் பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி!

இப்படிக்கு
**சி. ஜெயானந்தசர்மா,**
*பிள்ளையார் கோயில்,*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூளாய், சுழிபுரம்.

# செயல் வீரன் சிவப்பிரகாசம்

"நால்வகைத் தோற்றம் எழுவகைப் பிறப்பினுள் அரிதினும் அரிதானது" மானிடப் பிறவி சிந்திக்கும் கருவி மனம். மனதை உடையவன் மனிதன். மனித வடிவம் உடையவர் எல்லோரும் மனிதனாகிவிட முடியாது. எதற்கும் இலக்கணம் வகுத்த மனிதன் தனக்கு இலக்கணம் கூறவில்லை. பட்டப் பகலிலே கையில் விளக்கேந்தி ஒரு மனிதனைத் தேடினான் கிரேக்க ஞானி டயோகினஸ் (Diogenes). தேடியவனும் மனிதன் தேடப்பட்டவனும் மனிதன். இது சிந்தனைக் குரியது.

மனிதன் எதைஎதையோ கண்டு பிடித்துவிட்டான். ஆனால் மனிதனை இதுவரை கண்டுபிடிக்கவில்லை. நீ ஒரு மனிதனா? இது எத்தனையோ பேர் கேட்ட கேள்வி. நான் அறிந்த ஒரு மனிதன் அமரர் சிவப்பிரகாசம் அண்ணை.

மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர், முத்துக்குமாரசுவாமி தேவஸ்தானங்களை தனது இரு கண்களாக இறுதிக்காலம் வரை இறைபக்தியுடன் நேசித்த உயர்ந்த தோற்றம், கம்பீரநடை, ஆளுமை, அனுபவ முதிர்த்தி, ஆத்மீக தொண்டு, எல்லோருடனும் இனிமையாகப் பேசும் இயல்பு, அன்பும், பண்பும், மற்றவர் கருமத்தை தமது கருமம் என உணர்ந்து செயலாற்றும் கொள்கை போன்ற குணாதிசயங்கள் எல்லாம் குடிகொண்டதால் எல்லோரையும் தன்பால் கவர்ந்திழுக்கும் தன்மையுடைய செயல் வீரன் அமரர் சிவப்பிரகாசம் அண்ணை அவர் களேயாகும்.

ஒருவர் மேன்மையடைவதில் மனைவியின் பங்களிப்பு மேலா னது. பக்தானக்கேற்ற பதிவிரத்தையாயிருந்து இத்தனை காலமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிரண்டு மணி ஒன்றாய் வாழ்ந்த அம்மையாரையும் விட்டுப் பிரிந்தார். அமரர் சிவப்பிரகாசத்தின் ஆன்மபலம் அம்மையாருக்கு என்றும் உதவும்.

தம் சுயகெளரவத்தை அவர் எச்சந்தர்ப்பத்திலும் அடகு வைத்தது இல்லை. ஆயினும் அன்புக்கும் பண்புக்கும் முன் அடிபணியத் தவறிய தில்லை.

வாழ்வு இவரறிந்த உண்மைக்கேற்ப இங்கும் திருப்தி அங்கும் திருப்தியாகத்தான் இருக்குமென நாம் நம்ப வேண்டும். இந்த உண்மையை அறிந்து அன்னாரது மனைவி, மக்கள், சுற்றத்தார் அனைவரும் ஆறுதல் பெறுபவர்களாக.

அமரர் சிவப்பிரகாசம் அண்ணையின் ஆத்மா சிவபதமடைய நாம் அனைவரும் பிரார்த்திப்போமாக.

**இ. த. விக்னராசா,**

***ஓய்வுநிலை மேல்நீதிமன்ற நீதிபதி.***

மானிடப் பிறப்பென்பது எங்களுக்குப் பலமுறை கிடைக்கும் ஒரு பிறப்பென்று எண்ணி இப்பிறப்பில் இல்லாவிட்டால் மறுபிறப்பில் பார்ப்போம் என்று எண்ணி இருந்துவிடாதீர். மானிடப் பிறப்பு என்பது ஒருவருக்கு ஒருமுறைதான் கிட்டும். எனவே கிட்டிய இப் புனிதமான மானிடப்பிறப்பில் நீங்கள் உங்களை உணர்ந்து உங் களுடைவற்றை உணர்ந்து, பிறதினை உணர்ந்து, உணர்வுகளை உணர்ந்து, இயற்கையை உணர்ந்து, இறுதியாக இறைவனையும் உணர்ந்துகொள்ளுங்கள். இப்பிறப்பிலேயே நீங்கள் எல்லாவற்றை யும் பெற்று பிறவாத பேரின்பப் பெருவாழ்விற்குள் புகுந்துவிடலாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
23 - 09 - 1931



இறப்பு
26 - 06 - 2016

அமரர்

## பழனி சிவப்பிரகாசம்

அவர்கள்

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் கடமை புரியும்
திரு.சி.விக்னகுமாரின் தந்தையார்
**பழனி சிவப்பிரகாசம்** அவர்களின்
மறைவில் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மேல்நீதிமன்றம்,
குடியியல் மேல் முறையீட்டு
மேல் நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

(மேல்நீதிமன்ற நீதிபதிகள்,
பதிவாளர், கணக்காளர்,
உத்தியோகத்தர்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
23.09.1931



உதிர்வு
27.06.2016

தற்போது சேவையிலுள்ள எமது அஞ்சல்சேவகர் சி.ஜேந்திரகுமாரின் அன்புத்தந்தையார்

## அமரர் பழனி சிவப்பிரகாசம்

(ஓய்வு பெற்ற அஞ்சல் சேவகர்)

எங்கே வாழ்க்கை தொடரும்–அது
எங்கே எவ்விதம் முடியும்
இது தான் பாதை இதுதான் பயணம்
என்பது யாருக்கும் தெரியாது
மனித உருவங்கள் மாறலாம்
மானிட நெஞ்சில் பதித்தவை அழியாது
நேற்று வரை எங்களுடன் இன் முகம் காட்டி
நேசமுடன் பழகியதை எம்மால் மறக்க முடியுமா
இன்று முதல் எம்மை எல்லாம்
பரிதவிக்க விட்டு இறைவனின் பாதங்களைப் பற்றிய
உன் போல் அன்பு உள்ளம் கொண்ட இனியவரை
எங்கு நாம் தேடுவோம் இனி
எப்படி ஆறுவோம் ஐயா

அவர்களின் மறைவு குறித்து நாமும் துயர் கொள்வதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
அஞ்சல் சமூகம்
சுழிபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை



மலர்வு
23-09-1931

உதிர்வு
26-06-2016

# அமரர் திரு பழனி சிவப்பிரகாசம்

*(ஓய்வு பெற்ற தபால் உத்தியோகத்தர்)*

திரு சிவப்பிரகாசம் அவர்கள் எமது மூளாய் கிராமத்தின் ஓர் மூத்த உறுப்பினர் அன்னாரின் ஆலய தொண்டுகள் யாவும் அவரின் தந்தை வழிவந்த தொடர் பண்பாடுமிக்கதாகும் திரு ப. சிவப்பிரகாசம் அண்ணா அவர்கள் மூளாய் சித்திவிநாயகர் ஆலய தேர் உற்சவமானது சண்முகம் குடும்பத்தினர் ஆகிய எங்கள் உபயமாகும். இவ் உபயத்தில் தங்கள் குடும்பமும் எங்களுடன் இணைந்து பங்குபற்றி இத் தேர்த் திருவிழாவை மிகவும் சிறப்பாக நடத்தி வந்தவர். மிகவும் பண்பாகவும் ஆலய விதிமுறைகளுக்கு அமையசெயட்து வந்த ஓர் உத்தமராவார்.

அன்னாரின் மறைவு அவரின் குடும்பத்தவர்களுக்க மட்டுமல்ல எமது தேர்த் திருவிழா உபயத்திற்கும் பேரிழப்பாகும். ஆலயத்தில் புதிய தேர் அமைக்கும் சபை 1979ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது இற்றைவரை இருந்து அச்சபையை திறம்பட நடத்திவந்த பெருமைக்குரியவராவார். அன்னாரின் மறைவால் துயருறும் மனைவி, மக்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மூளாய்,
சுழிபுரம்
27-06-2016

மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர்
தேர்த் திருவிழா உபயகாரர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூளாய் ஊர் வாழ்ந்த மூத்ததோர் உத்தமன்
வேழ முகத்தானுக்கு வேளையெல்லாம் பணி செய்த வித்தகர்
ஓய்வுபெற்ற தபாலக உத்தியோகஸ்தர்

**அமரர். உயர்திரு பழனி சிவப்பிரகாசம்** அவர்களின் பிரிவுக்காய்

# வருந்தித் துயர் பகிர்கின்றோம்



*மாநிலம் தனைக்க*
*23.09.1931*

*வானகம் சிறக்க*
*27.06.2016*

பழனியார் என்றதொரு பழம்பெரும் மாந்தரின்று
குழந்தையாய்ப் பெற்றிடவே குவலயம்தன்னில் தோன்றி
வளர்ந்து நல்லறிஞராகி வாய்த்ததோர் வாழ்வில் வாழ்ந்து
இழந்துநாம் துடிக்கத்தானோ சிவப்பர் இறையடி சேர்ந்தாரின்று!

கல்வியில் வல்லோனாகிக் கலை பல பயின்று கொண்டு
நல்லாசான் அறிஞரெல்லாம் போற்றிடும் கொள்கையோடு
எல்லோர்க்கும் உதவவென்றே அஞ்சலகத் தொழிலுமாற்றி
சொல்லற்கு அரிய செய்தார் சிவப்பர் சோகமோ அடைந்தாரின்று

அந்தணர் பலரை நாடி ஆகம விதிகள் கற்று
மந்திரம் சொல்லும் பொருளை மற்றோர்க்கும் எடுத்துக்கூறி
வந்து நம் கிரிகையெல்லாம் வகைவகையாகச் செய்தார்
நொந்துநாம் கலங்கிடவோ சிவப்பர் சிவனடி சேர்ந்தாரின்று!

வதிரன் புலோலியான் வாசல் தன்னிலே வந்து நாளும்
முதிர்ந்த நற் பக்தியாலே முன்னின்று பணிகள் செய்து
புதிர்பூத்த பிள்ளையாரின் பக்தராய்ப் பவனி வந்தார்.
உதிர்ந்ததோர் மலருமென்றோ சிவப்பர் அவனடி சேர்ந்தாரின்று

கரத்தினில் ஐந்தானென்றும் ரதத்தினிலே செல்லவென்று
சிரத்தினில் அதனையேற்றுத் திருப்பணிச் சபையில் நின்று
தரத்தினில் உயர்ந்தே நிற்கும் ரதமோடக் கரமுமீந்தார்
உரத்துநாம் கதறிடவோ சிவப்பர் அரனடி சேர்ந்தாரின்று.

மூத்ததோர் பிரசையென்ற முழுமைக்கே சொந்தமாகி
நாத்திறன் கொண்டே நாளும் நடப்பதை முன்னால்கூறி
சாத்திர சம்பிரதாயங்களைச் சரிவரச்செய்தே வைப்பார்
பாத்திரம் உடைந்ததென்றோ சிவப்பர் பரமனை அடைந்தாரின்று!

ஊருக்கே தந்தையான உத்தமர் மறைந்ததாலே
காருக்குள் வீழ்ந்தே கலங்கும் மனைமக்கள் மருகரோடும்
பாருக்குள் நாமும் சேர்ந்தே படும்துயர் பகிர்ந்து கொண்டு
பேருக்குப் பெருமை சேர்த்தார் சிவப்பரண்ணா சாந்தியுற வேண்டுகின்றோம்.

ஓம்
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சித்திவிநாயகர் வர்த்தக நிலையம்
பிள்ளையார் கோயிலடி,
மூளாய், சுழிபுரம். 28.06.2016

**அன்னாரின் பிரிவால்**
துயருறும்
**க. பாலச்சந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் துளிகள்



மலர்வு
1931.09.23

உதிர்வு
2016.06.26

## அமரர் பழனி சிவப்பிரகாசம்

ஊரெலாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே. (திருமந்திரம்)

பெருமை சிறுமை அறிந்தெம் பிரான்போல்
அருமை எளிமை அறிந்தறி வார்ஆர்
ஒருமையுள் ஆமைபோல் உள்ஐந்து அடக்கி
இருமையுங் கேட்டிருந் தார்புரை அற்றே (திருமந்திரம்)

அமரரான **பழனி சிவப்பிரகாசம்** அவர்களின் ஆத்ம சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி, ஆற்றொணாத்துயரத்துடன் வாடும் உறவுகள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலை பதிவுசெய்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

த.சின்னத்தம்பி குடும்பத்தினர்
கைதடி, தெற்கு, கைதடி

கைதடிகொம்0774574565



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு

23-09-1931



உதிர்வு

26-06-2016

## அமரர் திரு பழனி சிவப்பிரகாசம்

(ஓய்வு பெற்ற தபால் உத்தியோகத்தர்)

எமது கிரமத்தின் மூத்தபிரஜையும் எமது சங்க உப-செயலாளருமாகிய **சிவப்பிரகாசம் ஜேந்திரகுமாரின்** அன்புத் தந்தையுமாகிய **பழனி சிவப்பிரகாசம்** அசவர்களின் மறைவு எமக்குப் பேரிழப்பாகும்.

அன்னார் கிராமத்தின் சங்கங்களுக்கு ஆலோசனை வழங்கியும் இக்கிராம ஆலயங்களின் தேர்த் திருப்பணிச் சபையின் 1979ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை இச்சபையின் அங்கத்தவராக இருந்து அத் தேரை உருவாக்க சபையினருடன் முன்னின்று உழைத்த பெருந்தகையாவார்.

அன்னாரின் மறைவு இக்கிராமத்திற்கு ஓர் பேரிழப்பாகும். அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தார் அனைவருக்கும் எமது சபையின் சார்பில்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மூளாய்.
27-06-2016

மூளாய் கிராம முன்னேற்றச் சங்கம்

திருமொழி அச்சகம், சங்கானை. 0213215867, 0212251066

# கண்ணீர் அஞ்சலி



| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 23-09-1931 | | 26-06-2016 |

## அமரர் திரு பழனி சிவப்பிரகாசம்

(ஓய்வு பெற்ற தபால் உத்தியோகத்தர்)

## "சிவப்பிரகாசம் அண்ணை"

எமது கிரமத்தின் இரு கண்கள் போல் விளங்குகின்ற மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தானம், மூளாய் ஸ்ரீமுத்துக் குமாரசுவாமி தேவஸ்தானம் ஆலயங்களின் அரிய பக்தரும் தொண்டரு மாகிய **"சிவப்பிரகாசம் அண்ணை"** என்று அன்பாக அழைக்கப் பட்டவருமாகிய **"பழனி சிவப்பிரகாசம்"** அவர்களின் மறைவு எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது.

அன்னார் மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தான பரிபாலன சபை செயலாளர் **திரு சிவப்பிரகாசம் ஜேந்திரகுமார்** அவர்களின் அன்புத் தந்தையுமாவார்

ஆலய சேவையில் அரிய பற்றுக் கொண்ட அன்னார் மேற்படி ஆலயங்களுக்கு ஓர் அழகிய சித்திரத் தேர் உருவாக அயராது பாடுபட்ட ஓர் அதி மூத்த தொண்டனாக அவரின் தந்தையார் காலம் தொட்டு பணியாற்றி வந்த பக்கனாவார். நன்கொடை வழங்கிய ஓர் உத்தமயாவார்.

**அன்னாரின் மறைவு இக்கிராமத்திற்கு ஓர் பேரிழப்பாகும். அன்னாரின் மறைவால் துயருறும் மனைவி, மக்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்**

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர்**
**பரிபாலன சபை**

மூளாய்.
27-06-2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
23 * 06 * 1931



உதிர்வு
26 * 06 * 2016

எமது மன்றத்தின் முன்னாள் உறுப்பினர்
திரு சி. ஜேந்திரகுமார் அவர்களின் அன்புத் தந்தையாரும்
எமது மன்ற முன்னாள் உறுப்பினருமாகிய

## அமரர் திரு பழனி சிவப்பிரகாசம்

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)

பண்பின் உறைவிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய் வாழ்ந்தவர்
வந்தது வாழ்வதற்கும் வாழ வைப்பதற்கும்
வானவர் போற்ற கடமை முடிந்தது போலும்
படுத்துழலாது பக்குவம் கெடாது பாங்கான நன்மக்கள்
எண்ணியபடி சீராக வாழ்ந்த உத்தமர்
பூவுலகிலிருந்து உபசாரம் நிறைவாகக்
கண்டுமகிழ்ந்து மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர்
பாதத்தில் அமைதிகாணப் பயணமானார்.

அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மூளாய் வதிரன்புலோ பதியுறையும் சித்திவிநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மூளாய்,
சுழிபுரம்.
28-06-2016

பிரிவால் துயருறும்
**மூளாய் இந்து இளைஞர் மன்றம்**

திருமொழி அச்சகம், சங்கானை. 0212251066, 0213215867



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிடனாய்ப் பிறந்து மானிடனாய் வாழ்ந்து
காலத்தால் அழியாது பேர்துலங்க வைத்திட்டு பிறவாத
பேரின்பப் பெருவாழ்வு பெற்றிட்ட

## அமரர்

## உயர்திரு பழனி சிவப்பிரகாசம் அவர்கள்

இறையடியில் இன்புற்று இருக்கின்றார் என்றெண்ணி
தேற்றம் கொள்வீர்களாக!

பார்புகழும் மூளாயூர்ப் பதியிலே வாழ்ந்திருந்து
பேர்துலங்க உமையெல்லாம் வளர்த்தெடுத்த தந்தையார்
நேர்மையினார் சிவப்பிரகாசம் எனும் நாமம் கொண்டார்
ஊர் உலகை விட்டுமே மறைந்திட்டாரென்று
மார்பதனில் அடித்துமே மனங்கலங்கி அழுதிடாதீர்
கார்முகிலில் ஏறியந்தக் கடவுளாரே வந்தவரை
சேர்க்குமிடம் சேர்ப்பதற்காய் கொண்டு சென்றாரென்ற
ஓர்முடிவினோடு உளம் தேறுடுவீர் நன்றே!

இந்த உடல் குறித்து மெய்யும் பொய்யாகிவிடும் என்று
பட்டினத்தாரும், இன்றிருப்பார் நாளை இல்லையென்று
தாயுமானவரும், ஆண்டாண்டுதோறும் அழுதுபுரண்டாலும்
மாண்டார் வருவாரோ என்று ஔவையாரும், பகர்ந்துநிற்க
நாம் ஏன் அதற்காகக் கலங்க வேண்டும்? நமக்கும்
அதுவாழியே நாம் போமளவும் இட்டு உண்டு
மகிழ்ச்சியோடு வாழ்வோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆத்மீகத்தால் வாழ்த்துகின்ற வாழ்த்தென்பது**
**எங்கேயும் எதிலேயும் பலித்துவிடும்**
**ஆதலால்**
**எல்லோரையும் எப்போதும் வாழ்த்துவோமாக.**

வாழிநம் மூளாயூர் மூத்தோன் வாழி
வள்ளியொடு தெய்வானை வடிவேலன் வாழி
நண்ணியிறை பூசைசெய்யும் அந்தணர்கள் வாழி
நறுஞ்சமய நெறிவளர்க்கும் பெரியோர் வாழி
எண்ணிறைந்த பாட்டிசைக்கும் புலவோர் வாழி
ஏற்புடனே கேட்டருளும் அன்பர் வாழி
வாழிநம் பூரணைபுட்கலை சமேத ஐயப்பன் வாழி
வளர்சமய நெறிவாழி! வாழி! வாழி!


வான் முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்!

**ஓம் நம பார்வதி பதயே... அரஹர மகாதேவா**
**தென்னாடுடைய சிவனேபோற்றி! எந்நாட்டவற்கும் இறைவா போற்றி!**
**இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!**
**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலாகி அரசாகி அவனியிலே பரந்திருக்கும்
## அமரர் பழனி சிவப்பிரகாசம் அவர்களின்
# வம்சாவழி




* அமரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத அரும்பெரும் உதவிகளாற்றிய உங்கள் அனைவருக்கும் நாம் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது அன்பிற்கும் பாசத்திற்குமுரிய குடும்பத்தலைவர் **அமரர் உயர்திரு பழனி சிவப்பிரகாசம்** அவர்கள் இவ்வுலகிலே வாழ்வியலை மேற்கொண்ட காலத்திலே அவரை அன்போடு நேசித்தவர்கட்கும், அவர் நோய்வாய்ப்பட்டிருந்த நாட்களிலே அவரை அணுகி நலம் விசாரித்து ஆறுதல் அளித்தவர்கட்கும், அவருக்கு அன்போடும் பாசத்தோடும் வைத்திய சிகிச்சைகளை மேற்கொண்டவர் கட்கும், அவர் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஓடோடிவந்து எமது நிலைமையை அறிந்து ஆகவேண்டிய அனைத்து உதவிகளையும் செய்தவர்கட்கும், அன்னாருடைய உடல் இரண்டு நாட்களாக இல்லத்திலே அஞ்சலிக்காக வைக்கப் பட்டிருந்த போது அலைகடலெனத் திரண்டுவந்து அஞ்சலி செலுத்தியோற்கும் கண்ணீர் அஞ்சலிகள், மலர்வளையங்கள் சாத்தி அஞ்சலித்தோர்க்கும் தொலைத் தொடர்புச் சாதனங்கள் மூலம் துயர்பகிர்ந்து ஆறுதல் அளித்தவர்கட்கும், இறுதிக் கிரிகைகள் நடைபெறுவதற்கு அனைத்து ஒத்துளைப்புகளையும் வழங்கியோற்கும் இறுதி நேரத்தில் அஞ்சலி உரைநிகழ்த்தி அவரின் சிறப்புக்களை எடுத்துக் கூறி யோற்கும் இறுதி ஊர்வலத்திலே மயானம் வரைவந்து ஆறுதல் அளித்தவர்கட்கும் தகனக் கிரிகைகளை முன்னின்று நடத்தியோற்கும் தொடர்து நடைபெற்ற ஆத்ம சாந்திக் கிரிகைகளில் பங்குகொண்டோருக்கும், மற்றும் இன்றைய அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளில் பங்குகொண்டு எமது மதிப்பார்ந்த குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திக்கு பிரார்த்தித்து உதவியோற்கும் அத்தோடு எமது துன்ப துயரங்களை அறிந்து கடந்த முப்பது நாட்களும் உண்டிகொடுத்து உயிர் கொடுத் தவர்கட்கும் மற்றும் எல்லா வழிகளிலும் எல்லா உதவிகளும் செய்த அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் நாம் எமது காலத்தால் கரைந்துவிடாத நன்றிகளை யும் கடமைப்பாட்டையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றிகள்

*மூளாய், சுழிபுரம்.*

குடும்பத்தவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரகாசாரம்



தன்னம்பிக்கை தன்னை வாழ்க்கையிலே
வளருங்கள்
தாழாத பாசத்தை இறைவன்மேல் வையுங்கள்
தித்திக்கப் பேசியே திசைகளை வெல்லுங்கள்
தீராத கோவத்தை தீர்த்திடப்பழகுங்கள்
துன்பத்தில் துவழ்வோரின் துயர்துடைக்க
முயலுங்கள்
தூற்றலையும் போற்றலையும் சமமாக
மதியுங்கள்
தெரிந்ததைப் பிறருக்கும் சொல்லியே
கொடுத்திடுங்கள்
தேடலை வாழ்க்கையின் இறுதிவரை
தொடருங்கள்
தைரியத்தோ டெதையும் முகம்கொடுக்கப்
பழகுங்கள்
தொட்டதைத் துலங்கவே துரிதமாய்ச்
செய்யுங்கள்
தோல்வியென்று ஒன்றிங்கு இல்லையென்று
காட்டுங்கள்.
தௌவியத் தோடிந்த தரணியிலே நடவுங்கள்
(த்) இத்தனையும் இருந்திட்டால் இன்புற்றே
வாழ்வீர்கள்.

"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின்
சாராம்சமுமாகும்"

—புழனி சிவப்பிரகாசம்—

Evergreen Printers, 693, K.K.S Road, Jaffna. Tel: 021 2219893

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org